முதன்மை மாவட்ட நீதிமன்றம், ஈரோடு

OS. No. 30/2020

நாள் : 19.06.2026

DW1 : கஸ்தூரி, க/பெ. ரவிச்சந்திரன்

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> : (பிரதிவாதி தரப்பில் 1ம் சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

எனக்கு என்ன தொழில் என்றால் விவசாயமாகும். எனது கணவர் விவசாயம் மற்றும் ஜவுளி தொழிலும் நடத்தி வருகிறார். எனது கணவர் வருமான வரி கட்டுவதில்லை. எனது கணவருக்கு பூர்வீக சொத்துக்கள் எதுவும் இல்லை, ஒரு இடம் உள்ளது. மேற்படி இடம் நாதகவுண்டன் பாளையத்தில் 3000 சதுர அடி உள்ளது. மேற்படி இடத்தின் பேரில் எனது கணவர் அடமான கடன் எதுவும் பெற்றுள்ளாரா என்றால் அதுபற்றி தெரியாது. இந்த வழக்கு தொடுத்துள்ள விஸ்வநாதனை எனக்கு தெரியாது. நான் விஸ்வநாதனை பார்த்ததே இல்லை, பணம் வாங்கிய போது தான் பார்த்தேன். விஸ்வநாதனை பணம் வாங்குவதற்கு முன்பு யார் என்று எனக்கு தெரியாது விஸ்வநாதன் கந்துவட்டிக்கு பணம் கொடுத்து வருகிறார், அது எனது கணவர் மற்றும் பணம் வாங்கி கொடுத்தவர் சொல்லி தான் தெரியும். வாதியிடம் இருந்து எனக்கு பணம் வாங்கி கொடுத்த நபரை எனக்குத் தெரியாது, எனது கணவருக்கு தான் தெரியும். பணம் வாங்கி கொடுத்த நபரும் எனது கணவரும் வாதியுடன் சென்று எப்போது எந்த தேதியில் பணம் கேட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பணம் கேட்ட அன்று வாதியும் எனது கணவரும் என்ன பேசிக் கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி விவரங்கள் அனைத்தும் எனது கணவருக்கு தான் தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு எப்படி பாத்தியம் என்றால் நான் கிரயம் வாங்கிய சொத்தாகும். மேற்படி கிரயம் எந்த தேதியில் வாங்கினேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி சொத்தின் சர்வே நம்பர் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1 3/4 ஏக்கர் அதில் 1/3 பங்கு எங்களுடையதாகும். மேற்படி சொத்து பிரிவினை ஆகாத பொதுவில் உள்ள சொத்து ஆகும். எனது நிரூபண பிரமாண பத்திரத்தில் பிரிவினை ஆகாத சொத்தை கிரயம் பெறும் போது சுவாதீனம் எடுக்க முடியாது என்று நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தை நான் கிரயம் பெறும் போது பொதுவில் மூன்றில் ஒரு பங்கு என்று வாங்கினேன் அதை நான் சுவாதீனம் எடுத்தேனா என்றால் எடுத்தேன். பொதுவில் வாங்கிய சொத்தை கிரயம் ஏற்பட்டதன் பின்னிட்டு சுவாதீனம் அடைய முடியும் என்றால் சரிதான். தாவா சொத்தில் மின் இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி சொத்தில் மின் இணைப்பிற்கான இரசீது ஏதேனும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை அது விவசாயத்திற்கான இலவச மின்சாரம் ஆகும். தாவா சொத்தில் வீடு எதுவும் இல்லை. தாவா சொத்தில் நாங்கள் குடியிருக்கவில்லை, ஆனால் ஆடு மாடுகள் வைத்து புழங்கிக் கொண்டு வருகிறோம். தாவா சொத்து

SAMEENA S

Digitally signed by SAMEENA S
Date: 2026.06.19 16:47:34 +0530

நாதகவுண்டன்பாளையம் அத்தி காட்டில் உள்ளது. தாவா சொத்து மொடவாண்டி, சத்தியமங்கலம் கிராமம் ரீ சர்வே 393 இல் உள்ளது என்றாலும் நான் சொல்வது போல் நாதகவுண்டன்பாளையம் அத்திக்காட்டில் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. 03.02.2016 தேதியில் தாவா சொத்தை குறித்து வாதிக்கு கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொடுத்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் அனைத்து பக்கங்களிலும் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதுவதற்கு முத்திரைத்தாள் பத்திரம் எங்கு வாங்கியது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் இரண்டாவதாக சாட்சி கையொப்பம் செய்திருப்பவர் எனது கணவர் ரவிச்சந்திரன் ஆகும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்ன வாசகங்கள் எழுதப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியாது. எனது கணவரும், வாதியும் சேர்ந்து வா.சா.ஆ.1 பத்திரத்தில் உள்ள விபரங்களை சொன்னார்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 பத்திரம் எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்று எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.1 ஐ யார் தட்டச்சு செய்தார்கள் என்று தெரியாது. எனது கணவரிடமிருந்து வாதி தாவா சொத்தின் ஆவணங்களை பெற்றுக் கொண்டு சென்று வா.சா.ஆ.1 ஆவணத்தை தயார் செய்து கொண்டு வந்தார். எனது கணவர் வா.சா.ஆ.1 தட்டச்சு செய்த இடத்திற்கு செல்லவில்லை. வாதி எனது கணவரிடம் என்ன பத்திரம் எழுதி வருவதாக கூறி சென்றார் என்றால் பணம் கொடுத்ததற்கு பத்திரம் எழுதி வருவதாக கூறிச் சென்றார். வாதியிடம் நாங்கள் ஐந்து இலட்சம் பணம் வாங்கியதற்கு பத்திரம் எழுதி வருவதாக சொன்னார். வாதி அடமான பத்திரம் எழுதுவதாக சொல்லிச் சென்றாரா அல்லது கிரய ஒப்பந்த பத்திரம் எழுதுவதாக சொன்னாரா என்றால் நாங்கள் பணம் வாங்கியதற்கு பத்திரம் எழுதி வருவதாக மட்டுமே சொன்னார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் நாங்கள் எங்கு வைத்து கையொப்பம் செய்தோம் என்றால் பத்திரம் பதிவு செய்யும் அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்தோம். வா.சா.ஆ.1 பத்திரத்தை நானும் படித்து பார்க்கவில்லை, எனது கணவரும் படித்துப் பார்க்கவில்லை. பத்திர பதிவாளரிடம் பத்திரத்தை படித்துக் காட்டுமாறு நாங்கள் கேட்டோமா என்றால் இல்லை நம்பிக்கையுடன் கையொப்பம் செய்தோம்.

**(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

SAMEENA S

Digitally signed by SAMEENA S
Date: 2026.06.19 16:47:43 +0530

Principal District and Sessions Judge,
Erode.